

புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | மார்ச் 25, 2021 | புரட்சி 20 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00

## ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம் நடத்திய கருத்தரங்கு


# திராவிட ஆட்சிகளின் மீதான அவதூறுகளுக்கு ஆய்வுபூர்வ மறுப்பு

*இந்தியாவிலேயே திராவிட ஆட்சிகள் கல்வி – மருத்துவம் – உணவு உள்ளிட்ட விளிம்பு நிலை மக்களுக்காக உருவாக்கிய திட்டங்களால் தமிழகம் முதலிடத்தில் நிற்கிறது.*

திராவிட இயக்கம் பற்றி, பன்னிரண்டு ஆய்வாளர்கள் உரிய தகவல்களுடன் ஆய்வு நோக்கில் எழுதிய 12 ஆங்கில ஆய்வுக் கட்டுரைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு - ‘திராவிட ஆட்சி மாற்றமும் வளர்ச்சியும்’ எனும் தலைப்பில் 352 பக்கங்களோடு கயல்கவின் பதிப்பகம் சார்பில் நூலாக கடந்த வாரம் வெளி வந்திருக்கிறது மு.க. ஸ்டாலின் இந்த நூலை வெளியிட்டார். பொருளாதார ஆய்வாளர் ஜெயரஞ்சன், பதிப்பாசிரியராக இந்நூலைத் தொகுத்திருக்கிறார். ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம் சார்பில் இந்த நூலின் கட்டுரைகள் சென்னை திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையத்தில் திறனாய்வு செய்யப்பட்டன. 21.3.2021 அன்று மாலை 6 மணியளவில் இந்நிகழ்வு நடந்தது.

‘பொருளாதார மாற்றம், ஜாதி, அரசியல் மற்றும் திராவிட நலத் திட்ட அரசியல்’ என்ற தலைப்பில் ஜெயபிரகாஷ், ‘காவிரிப்படுகையில் நிலத்தின் அரசியல் பொருளாதாரம்’ என்ற தலைப்பில் எழிலரசன், ‘குஜராத்திலும் தமிழ்நாட்டிலும் வளர்ச்சியின் பயன் ஓர் ஒப்பீடு’ என்ற தலைப்பில் பிரகாஷ் ஆகியோர் திறனாய்வு செய்தனர். இவை நூலில் இடம் பெற்றுள்ள ஆய்வுக் கட்டுரைகள்.

இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், “திராவிட ஆட்சிகளில் தமிழ்நாடு அடைந்த பயன், போட்டி போட்டுக் கொண்டு திமுக, அதிமுக ஆட்சிகள் மக்கள் நலத் திட்டங்களை எப்படி செயல்படுத்தின, தற்போது அதிமுக வின் நிலை என்ன ? திராவிடத்தை ஒழிப்பேன் என்று கூறுபவர்களின் அரசியல் என்ன” போன்றவற்றை விரிவாக எடுத்துக் கூறி நிறைவுரையாற்றினார். அவரது உரையில் குறிப்பிட்டதாவது:




“இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான முன் மாதிரி மாநிலங்களாக இது வரை கேரளாவும் குஜராத்தும் மட்டுமே பேசப்பட்டு வந்தன. தமிழ்நாடு ஆய்வுக்கே எடுத்துக் கொள்ளப்படாத நிலை. இதற்கு இரண்டு காரணங்களை முன் வைக்கிறார், பேராசிரியர் ஜெய ரஞ்சன். ஒன்று - “அறிவுலகில் சஞ்சரித்த ஆய்வாளர்கள் பெரும்பாலோர் வயிறு வளர்ப்பாளர்களாக இருந்தனர். வேறு சிலர் கருத்து புள்ளி விவரங்கள் பற்றி கவலைப்படாமல் தாங்கள் ஏற்கனவே ஏற்றுக் கொண்ட கொள்கைகளின் அடிப்படையில் ஆய்வுகளை நடத்தினர். அது அவர்களுக்கு வசதியாக அமைந்து விட்டது. எதிர்ப்புகள் எதையும் சந்திக்க வேண்டியதில்லை. உண்மையில் திராவிட ஆட்சி காலம் இருண்ட காலம் என்பது ஒரு கருத்தாக்கம் அல்ல; வெற்றுக் கூச்சல்” என்று சுட்டிக் காட்டுகிறார்.

பொருளாதார சீர்திருத்தங்கள் இரண்டு முறைகளில் வகைப்படுத்தப்பட்டன. ஒன்று நாட்டில் பெரும் தொழில்சாலைகளை வளர்த்து, பொருளாதாரத்தை உருவாக்கி, அதன் வழியாக வருவாய் ஈட்டி அந்த வருவாயில் மக்களுக்கான திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்பது ஒரு கொள்கை. ஜெகதீஷ் பகவதி மற்றும் அர்விந்த் பனகரியா போன்ற பல ஆய்வாளர்கள் இந்தக் கருத்தைக் கூறுகிறார்கள். நாட்டின் பொருளாதாரம் வளரும் வரை மக்கள் நலத் திட்டங்களுக்காக அவர்கள் காத்திருக்க வேண்டும் என்பது இதில் அடங்கியுள்ள கருத்து.

இதற்கு நேர்மாறான விவாதங்களை நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் மற்றும் யேன்டிரேஸ் போன்ற ஆய்வாளர்கள் முன் வைத்தனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சி மட்டுமே இறுதியானது அல்ல; அதன் மூலம் மக்களுக்குக் கிடைத்த பலன் மக்களிடத்திலே அவை உருவாக்கிய தாக்கம் என்ன என்பதை ஆராய வேண்டும். குறிப்பாக மக்கள் நலத் திட்டங்களில் அரசின் தலையீடு இருக்க வேண்டும். மருத்துவம், கல்வி, உணவு போன்ற சமூகத்தின் உள்கட்டமைப்புகளில் அரசின் தலையீடு இருக்க வேண்டும் என்று அமர்த்தியா சென் போன்றவர்கள் வாதிட்டார்கள்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன் மோடியை பிரதமராக முன்னிறுத்துவதற்கு குஜராத்தை முன் மாதிரி வளர்ச்சி மாநிலமாக முன் வைத்து மோடி என்ற பிம்பத்தைக் கட்டமைத்தார்கள். தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்தப் பிரச்சாரத்தை அவர்களே கை கழுவி விட்டார்கள். இங்கே பேசிய தோழர் பிரகாஷ், குஜராத் வளர்ச்சியைப் பற்றி ஆய்வாளர் கலையரசன் எழுதிய கட்டுரையை முன் வைத்து உரிய தரவுகளுடன் ஆழமாகப் பேசினார். சொல்லப் போனால் ஊதிப் பெருக்கப்பட்டது தான் ‘குஜராத் மாடல்’ பொருளாதார வளர்ச்சிக்கான புள்ளி விவரங்களை மட்டுமே பேசுகின்றன. ஆனால் அந்த வளர்ச்சி சமூகத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. வறுமை வீதத்தைக் குறைத்தல்; மருத்துவம், கல்வி போன்ற சமூகத் திட்ட வளர்ச்சியில் கடந்த 20 ஆண்டுகளில் குஜராத்தைவிட தமிழகம் முன்னணியில் நிற்கிறது. இதை தரவுகளுடன் பகவதி மற்றும் கனகரியாவின் ஆய்வுகள் நிறுவியுள்ளன. பெட்ரோலியம் சார்ந்த தொழில் வளர்ச்சி மட்டுமே குஜராத்தில் இருக்கிறது. அது வீழ்ந்தால் குஜராத் சரிந்து விடும். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட தொழிலை மட்டும் சார்ந்தது அல்ல; பல்வேறு தொழில் துறைகள் இங்கே இயங்குகின்றன. இது குறித்த விரிவான ஆய்வுகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

கேரளாவைப் பொறுத்தவரை தொழில் வளர்ச்சியே இல்லாத மாநிலம். ஏராளமான இளைஞர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைக்குப் போய் விட்டார்கள். அவர்கள் வழியாக கேரளாவுக்கு வருகிற பணம், அங்கு பொருளாதார காரணியாக இருக்கிறது. கல்வியில் கேரளா வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆனால் மருத்துவ கட்டமைப்பு தமிழ் நாட்டைப் போல் அங்கு கிடையாது. கேரளாவின் கல்வி வளர்ச்சிக்கு கிறித்துவ மிஷினரிகளின் பங்கு மகத்தானது.

மற்றொன்று மேற்கு வங்க மாநிலம். 1977 முதல் 2011 வரை அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான இடது முன்னணி ஆட்சி நடைபெற்றது. இம்மாநிலத்தின் ஒரே சிறப்பாகப் பேசப்படுவது கிராமப் புறங்களில் நடந்த நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள். ஆனாலும் வேளாண்மை, சேவைத் துறை, கட்டுமானம், தொழில்துறை ஆகியவற்றிலும் மாநில மொத்த உற்பத்தியிலும் தமிழ்நாட்டைவிட பின் தங்கிய மாநிலமாகவே மேற்கு வங்கும் இருப்பதை தரவுகளுடன் கள ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. முனைவர் ஆ. கலையரசன், தனது கட்டுரையில் த்வாஜ்பயான் பட்டாச்சாரிய (2010) மற்றும் பார்த்தா சாட்டர்ஜியின் (2004) ஆய்வுகளை முன் வைத்து இதை நிறுவுகிறார். மேற்கு வங்க கிராமங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதால் அவர்களின் கல்வி, பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகி, மூலதனமில்லாதவர்களாக்கப்பட்டனர் என்றும் ஏனைய கட்சி சாராத குடிமைச் சமூகத்துடன் அவர்கள் விலகி நிற்கிறார்கள் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது. குறிப்பாக 1993-1994ஆம் ஆண்டிலிருந்து 2011-2012ஆம் ஆண்டு வரை கிராமப்புற பட்டியலின மக்களின் வறுமை நிலை தமிழ்நாட்டில் 42 சதவீதம் குறைந்த நிலையில் மேற்கு வங்கத்தில் 24.4 சதவீதமே குறைந்தது. மேற்கு வங்கத்தில் பெரும் தொழில் நிறுவனங்களை நடத்துவோரில் வங்காளிகளைவிட பனியாக்களும் மேற்கு வங்க மாநிலத்தைச் சாராதவர்களுமே அதிகம். மண்டல் குழு மேற்கு வங்கத்துக்கு பிற்படுத்தப்பட்டோர் நிலை குறித்து ஆராயச் சென்றபோது ‘எங்கள் மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவே கிடையாது. அந்த இடஒதுக்கீடு தேவையில்லை’ என்ற கருத்தை முன் வைத்தது, அங்கே ஆட்சியிலிருந்த இடது முன்னணி ஆட்சி என்பதையும் நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். இந்தப் பின்னணியில் தமிழ்நாட்டில் நடந்த திராவிட கட்சிகளின் ஆட்சிகளை மதிப்பிட வேண்டும்.

இங்கே விளிம்பு நிலை மக்களுக்கு வழங்கப்படும் விலை இல்லா திட்டங்கள் வழியாக அடித்தட்டு மக்கள் சுயமரியாதை மீட்டெடுக்கப்படுவதையும் அவர்களுக்கு அதன் வழியாகக் கிடைக்கக்கூடிய அதிகாரங்களையும் மலிவாக மதிப்பிட்டு மக்களை பிச்சைக்காரர்களாக்குவதாக இப்போதும் சிலர் மேடைகளில் பேசி வருகிறார்கள்.

ஒரு வேளை சாப்பாட்டுக்காக ‘ஆண்டை’களிடமும் எஜமானர்களிடமும் கையேந்தி நிற்கும் அவலத்திலிருந்து விடுவித்தது - ரூபாய்க்கு 20 கிலோ அரிசி திட்டம். உணவு - கல்வி - சுகாதாரம் மூன்றும் சமூக நீதியின் அடிப் படைக் கூறுகள். இதன் கட்டமைப்புகள் வலிமையாக்கப்பட்டு அதை மக்களுக்கு இலவசமாக வழங்கியது திராவிடக் கட்சிகள். ‘அனைவரையும் உள்ளடக்கிய சமூக வளர்ச்சி’ (Inclusive Social Policy) என்று இப்போது ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதைத் தான் பெரியார் ‘வகுப்புவாரி உரிமை’ என்று கூறினார்.

சத்துணவுத் திட்டம், இலவசக் கல்வி, இலவச மருத்துவ சேவை, பெண்களுக்கான உரிமைத் திட்டங்கள் போன்ற பல்வேறு சமூக வளர்ச்சிக்கான திட்டங்கள் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை அறிவியல் பூர்வமாக அலசும் பல ஆய்வுக் கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தில் நீதி கட்சி ஆட்சியில் சென்னை நகரில் மட்டும் தொடங்கிய மதிய உணவுத் திட்டம், காமராசர் காலத்தில் தமிழகம் முழுதும் விரிவானது. எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் சத்துணவு திட்டமாக விரிவாகி, பிறகு மத்திய அரசால் ஏற்கப் பட்டு, அதற்குப் பிறகு உச்சநீதிமன்றமே எல்லா மாநிலங்களிலும் அமுல்படுத்த வலியுறுத்தியது. இது சமூகத்தில் மிகப் பெரும் தாக்கத்தை உருவாக்கியது.

விளிம்பு நிலை மக்களுக்கான திட்டங்களின் பயன்களைப் பெற்ற மக்கள் இத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டியது அரசுக்குரிய கடமை என்று உணர்ந்து உரிமைகளைத் தட்டிக் கேட்கிறார்கள். ‘எஜமான் நினைத்தால் கொடுப்பார்; நம் கையிலா இருக்கிறது?’ என்ற அடிமை மன நிலைக்கு மக்கள் விடை கொடுத்து விட்டார்கள். இதுவே ஒரு ஜனநாயகத்துக்கான திறவுகோல்.

இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்காத ஆட்சிகளை மக்கள் மதிக்கத் தயாராக இல்லை.

உரிமைக்கும் தேவைக்கும் போராடக் கூடிய ஒரு சமூகமாக (Aspirational society) தமிழர் சமூகம் வளர்ந்து கொண்டிருக்கிறது. வட மாநிலங்களில் இதையெல்லாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.

(4ஆம் பக்கம்)

## பாரூக் நினைவு நாள் கருத்தரங்கில் தோழர் ஜின்னா பேச்சு

# சிறுபான்மை – பெரும்பான்மை மக்கள் வேறு; மதங்கள் வேறு

*கோவை, அண்ணாமலை அரங்கில் 21.3.2021 அன்று மாலை 4–00 மணிக்கு கழக கோவை மாநகரத் தலைவர் நேருதாஸ் தலைமையில், இஸ்லாமிய மதவெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட தோழர் பாரூக் நான்காம் ஆண்டு நினைவேந்தல் கருத்தரங்கம் நடைபெற்றது. அந்நிகழ்வில் கோவை, தோழர் ஜின்னா வரவேற்புரையாற்றினார். அவரது உரை:*

“கடந்த வருடம் தோழர் பாரூக்கின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதன் பிறகு கொரானா காரணமாக, கூட்டம், நிகழ்ச்சிகளுக்குத் தடை என அரசு அறிவித்து, அதனால்அன்று நிகழ்ச்சி நடக்குமோ, நடக்காதோ என்ற அச்சத்துடனேயே இருந்து, முடிவில் வெற்றிகரமாக கூட்டத்தை நடத்தி முடிந்தோம்.

அது போலவே இந்த வருடமும் கொரானா அச்சம் நிலவி வருகிறது. அது கேரளாவில் இருந்து வர வேண்டிய எசன்ஸ் கிளப்பினரை வர இயலாமல் செய்து விடுமோ என கடந்த ஒரு வாரமாக கலங்கிய நிலையில், அவைகளை கடந்து நம் கூட்டத்தில் லியாகத் அலியும், அஸ்ரப்பும் கலந்துகொண்டது, மிகவும் பாராட்டுக்குரியதும், மதிப்பிற்குரியதாகவும் கருதுகிறேன்.

கேரளா யுக்தி வாதிகள், பல பிரிவினராக பிரிந்து இருந்தாலும், கேரளா முழுவதும் கடந்த மூன்று வருடங்களாக, பாரூக்கிற்கு பல நினைவுக் கூட்டங்கள் நடத்தி உள்ளார்கள், பல உதவிகளும் பாரூக் குடும்பத்திற்கு செய்து இருக்கிறார்கள் எதற்காக?

கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத மறுப்பு என்பவைகளால் யார் பாதிக்கப்பட்டாலும், உதவ, ஒன்றிணைய மாநிலம், நாடு என்ற எந்த தடையும் கிடையாது என்பதை உணர்த்துவதற்காக. அதே போல எம்.எம். கல்புர்கி, கவுரி லங்கேஷ், தபோல்கர் போன்ற வேறு மாநிலங்களில் மதவாதத்தால் கொலை செய்யப்பட்டவர்களை, மாநில வேறுபாடு காணாமல் நினைவு கூரும் நம் தமிழக கட்சிகளுக்கு ஏனோ, தமிழ்நாட்டில் பிறந்து மதவாதத்தால் கொலை செய்யப்பட்ட, நம் பாரூக்கை மட்டும் நினைவுகூர மனம் வருவதில்லை, அது இசுலாமிய அமைப்புகளுடன் உள்ள பாசமா? தயக்கமா? இல்லை அச்சமா? என்பது தான் புரியவில்லை. ஆனால் மண் வேறாக இருந்தாலும், மொழி வேறாக இருந்தாலும், மத வெறியால் கொலை செய்யப்பட்டவர்களின் வரிசையில் பாரூக்கை என்றும் மறவாது நினைவு கூரும் கேரளா யுக்திவாதிகள் இன்று நம் கூட்டத்தில் இணைந்தது தான், மிகச் சிறப்புடையதாக நான் கருதுகிறேன்.

இந்த கோவை 1988களிலிருந்து 1998 வரை, எத்தகைய மதப் போட்டிகள் நிறைந்த கலவர பூமியாக இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். 1998களுக்கு முன்பு ஒரு மதவெறியனாக இருந்த நானே, 1998களுக்கு பிறகு எனக்கு மதங்கள் என்பதே வெறுப்பாக மாறி நாத்திகராக மாற்றி விட்டது. என்றாலும் இசுலாமிய மதத்தில் நாத்திகராக இருப்பது அத்தனை எளிதல்ல. நாத்திகத்தை பேசுவதற்கே அந்த மதத்தில் ஒருவருக்கு சுதந்திரம் இல்லை எனும் பொழுது, நாத்திகராக எவ்வாறு மாறுவது?

வீட்டில் நாத்திகம் பேச முடியாது, இசுலாமிய நண்பர்களிடம் நாத்திகம் பேச முடியாது எனும் பொழுது, இசுலாமிய சமூகத்திடம் எவ்வாறு நாத்திகம் பேசுவது?

ஏன் என்றால் அச்சம், மதத்தை வைத்து மத புத்தகத்தை வைத்து, மிரட்டி வாழும் சில மத குருமார்களால், இவர்களால் தூண்டி விடப்பட்டவர்களால் இசுலாமிய சமூகத்தில் விளையும் அச்சம். அச்சமூகம் தனி ஒரு குடும்பத்தை அச்சமூட்டுகிறது. அந்த குடும்பம் தனி ஒருவரை மிரட்டி சாதிக்கும் பணிய வைக்கும் வல்லமை உள்ளவையாக இருக்கிறது. இதை எல்லாம் மீறி கடந்து அவர் வர வேண்டும், அவ்வாறு வரும் ஒருவரால் தான், இசுலாத்தில் நாத்திகராக இயலும்.

ஆனால் இந்து மதத்தில் அவ்வாறு ஒரு நிலை இல்லை. இந்து மதத்தில் ஆத்திகனும் இருக்க இயலும், நாத்திகரும் இருக்க இயலும். அதற்கு அம் மதத்தில் சுதந்திரம் உண்டு. நாத்திகத்திற்கு சுதந்திரம் கொடுத்ததால் இந்து மதம் என்ன அழிந்து விட்டதா? அதற்கு உள்ள துணிவு கூட இசுலாமிய மதத்திற்கு இல்லையா என்றால், இல்லை என்பது தான் உண்மை.

எல்லா குப்பைகளையும் ஒன்றாகக் கொட்டி, அதற்கு இந்து மதம் என்று பெயர் வைத்தாலும், அதில் நான் உயர்ந்த குப்பை, நீ தாழ்ந்த குப்பை என்று கூறி வாழ்ந்து கொண்டு தானே இருக்கிறது. அதில் முழுக்க, முழுக்க மூட நம்பிக்கைகள்இருந்தாலும் அதை கடவுள் நம்பிக்கையாகக் காட்டி வாழ்ந்து தானே வருகிறது.

ஆனால், பார்ப்பனர்களுக்கு பாதிப்பு என்றால் மட்டும் இந்து மதம் மிரண்டு போகிறது. அவர்களுக்கு எதிரானவர்களை அழிக்கவும் நினைக்கிறது.



அவ்வகையில் கொலை செய்யப்பட்டு இறந்தவர்கள் தான் கல்புர்கி, தபோல்கர், கவுரி லங்கேஷ் என்பதையும் மறக்க இயலாது.

அதைப் போல தமிழகத்தில் பெரியாரிய கொள்கைகளை அழிக்க நினைக்கிறார்கள்; அதற்காக இந்துத்வாக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்றாலும் முடிவதில்லை. அதனால் வேறு வடிவங்களில், கதை கட்டி பெரியார் இசுலாமிய ஆதரவாளர் என கூறி, இந்துக்களை தனது ஆதரவாளர்களாக ஆர்எஸ்எஸ் மாற்ற முயற்சிக்கிறது. இராமசாமி இந்து மதத்திலுள்ளவர்களை மட்டுமே நாத்திகனாக கெடுத்து வைத்துள்ளார். ஓர் இசுலாமியனையோ, கிருத்துவனையோ இந்த ராமசாமியால் கெடுக்க இயலவில்லை, ஆனால் இந்துக்களை இசுலாமியராகவும் கிருத்துவர்களாக மாற்றும் துரோகத்தை செய்வதாக பெரியார் தொடங்கி இன்றுள்ள பெரியாரிஸ்ட்டுகள் வரை இந்துத்துவா விமர்சித்து வருகிறது.

அடுத்தது இசுலாம் எவ்வாறு பெரியாரை பயன்படுத்துகிறது? இன இழிவு ஒழிய இசுலாமே நன் மருந்து என பெரியார் கூறியதாக, தன் மதத்திற்கு அடிக்கடி விளம்பரம் செய்து கொள்வதும், இந்துத்துவா அதை தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு, பெரியாருக்கு எதிராக, இந்துக்களைத் தூண்ட, இசுலாமியர்களை அழிக்க அதை பயன்படுத்திக் கொள்கிறது.

இரு மதங்களுக்கு இடையிலான போட்டிகளில் கூட இவர்களுக்கு பெரியார் தான் தேவைப்படுகிறார். ஒன்று இசுலாத்திற்கு ஆதரவாக, மற்றொன்று பெரியாருக்கு எதிராக இந்துக்களை திரட்டுவதற்காக, இது இவ்வாறு இருக்க, இசுலாம் என்ன கூறிக் கொள்கிறது என்றால் அன்பு, சாந்தியை வலியுறுத்துவதே எங்கள் மதம், மார்க்கம் என, ஆனால் கொள்கை என்னவோ நாத்திகம் என பேசினால் வாயில் வந்ததை எல்லாம் பேசுவேன், வெட்டுவேன் கொல்வேன் என்பது, எந்த மாதிரியான அன்பு, எந்த மாதிரியான சாந்தி என்பது தான் புரியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது வெளி வேடம் கொண்ட மதம் இசுலாம் என்பதை, அது சரியாக அடையாளம் காட்டி விடுகிறது. அன்பென்பதும், சாந்தி என்பதும் வெளி வேடமிடும் முகமூடியாகவே பயன்படுத்திக் கொள்கிறது.

ஆக மத சார்பற்ற கட்சிகளே! நாத்திக கட்சிகளே! நமது பொது எதிரி மதவாத இந்துத்வா என்பதில் மாற்றுக் கருத்து இல்லை; சிறுபான்மை மக்களுக்குத் துணையாக இருப்பது, தோள் கொடுப்பது நம் எல்லோர் கடமைகளில் ஒன்று தான்.

ஆனால் அது சிறு பான்மை மதவாதத்திற்கு ஆதரவானதாக பெரும்பான்மையான இந்து மக்கள் நினைத்து விட்டால், அது பெரும்பான்மை மதவாதத்திற்கு ஆதரவு சேர்ந்து விடும். இந்துத்துவா அதை தனக்கு சாதகமாக கவர்ந்து விடும் என்பதையும் மறந்து விடக் கூடாது. அது சிறுபான்மை மக்களை வாழ வழியே இல்லாத ஒரு ஆபத்தை சந்திக்க வைத்து விடும். தானாகவே அவர்களைத் தீவிரவாதிகளாக்கி விடும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆக சிறுபான்மை, பெரும்பான்மை மக்கள் என்பது வேறு, பெரும்பான்மை மதவாதம், சிறுபான்மை மதவாதம் என்பது வேறு. இரண்டு மதவாதமும் மிகவும் ஆபத்தானது.

.இசுலாத்தில் அல்லாவை தவிர வேறு எந்த கடவுளையும் நம்ப மாட்டேன் என்பவர் மட்டுமே அதில் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. எல்லா கடவுளும் ஒன்று என இசுலாமியன் கூறுவதையோ, எல்லாக் கடவுளையும் ஆதரிக்கிறேன் என்கிற முசுலிமையோ மதத்தில் அனுமதிப்பது இல்லை.

அது மட்டுமல்லாமல்,யாராவது இசுலாமியர் மதத்தை விட்டு, வெளியேறினால் இசுலாமிய பெயரிலும் இருக்க கூடாது என மிரட்டுகிறது. அதன் விளைவால், அன்று வாழ்ந்த வெளியேறிய இசுலாமியர்கள் இந்து பெயரிலோ, தமிழ் பெயரிலோ மாற வேண்டிய கட்டாயம் அன்றைய இசுலாமியர்களுக்கு இருந்தது. அவ்வாறு மாறிய பல இசுலாமியர்கள் உண்டு, இசுலாமிய குடும்பங்களும் உண்டு. சில காலங்களுக்கு பின் அவர்களே கூறினால் தான் அவர் இசுலாமியராக பிறந்தவர் என்றே நமக்கு தெரியும். இல்லை என்றால் இந்து என்றே நாமும் நினைத்திருப்போம் இந்து மதமற்ற நாத்திகம் என்றோ, இந்து மதமற்ற தமிழன் என்றோ, இந்து மதமற்ற திராவிடன் என்றோ, இருந்திருந்தால் கூட நாங்கள் இணைந்திருப்போம். ஆனால் அத்தகைய நிலை இந்தியாவில் இல்லை,

ஏதோ நாங்களும் இந்துவாகயிருந்து சாதிகளை சுமந்து வாழ்ந்தவர்களை இசுலாமிய மதம், அதிலிருந்து வெளியேறவைத்து எங்களை காப்பாற்றி உள்ளது. என்றாலும் இன்று அதிலும் ஏற்றதாழ்வுகள் உள்ளது. மூடநம்பிக்கைகளில் இசுலாமும் விதிவிலக்கல்ல, என்பதை உணர்ந்ததினாலும், அத்தகைய மூடநம்பிக்கை கொண்ட இசுலாமியர்களையும், பகுத்தறிவுள்ள மனிதர்களாக மாற்ற முயற்சி செய்கிறோம்.

நாத்திகருக்கு என தனி அடையாளம் அரசியலமைப்பு சட்டத்தில் கிடைக்கும் வரை, முன்னாள் முசுலீமாக தொடர்வோம். எல்லா கடவுள் மதங்களை, அல்லா முதல் கொண்டு, எதிர்த்து போராடுவோமே தவிர, மூட நம்பிக்கை கொண்ட இசுலாமியராக வாழவோ, இந்து மதம் சார்ந்தவர்களாகவோ, இந்து மதத்தில் மீண்டும், ஏதோ ஒரு சாதி சார்ந்த நாத்திகர்களாக, எந்த நிலையிலும் சாகும் நிலைக்கு ஆளாக மாட்டோம் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரூக்கைக் கொல்ல காரணமாக இருந்த அந்த சித்தாந்தத்தை, சித்தாந்தவாதிகளுக்கு, இனி அத்தகைய எண்ணங்கள் எந்த ஒரு இசுலாமியனுக்கும் வரக்கூடாது என்பதை உணர வைப்போம் என்று கூறி நிகழ்ச்சிக்கு கருத்துரையாற்றவும், கலந்து கொள்ளவும் வந்துள்ள அனைவரையும் வரவேற்று பாரூக்கின் நினைவேந்தல் சிந்தனைகளாக நான் முன் வைத்துள்ளவற்றையும் பரிசீலிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொண்டு எனது வரவேற்பு உரையை முடிக்கிறேன்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 25.03.2021**

### தனி தொகுதியில் நோட்டா–விற்கு வாக்கு செலுத்த கழகம் முடிவு

தனி தொகுதியில் மட்டும் கழகத்தால் எடுக்கப்பட்டுள்ள தேர்தல் புறக்கணிப்பு முடிவால் யாருக்கும் வாக்கு செலுத்த விருப்பமில்லை என்பதை பதிவு செய்ய நோட்டாவிற்கு (NOTA - None of the above) கழகத் தோழர்கள் வாக்கு பதிவு செய்வார்கள்.


தனி தவிர்த்த மற்ற அனைத்து தொகுதிகளிலும் திமுக அதன் கூட்டணி கட்சிகளுக்கு வாக்கு செலுத்துவார்கள், பரப்புரை செய்வார்கள்.

### கழக ஏட்டிற்கு நன்கொடை

புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு, சந்தா தொகை ரூ. 10000 மற்றும் வளர்ச்சி நிதி ரூ.5000/-த்தை நன்கொடையாக தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன், பொள்ளாச்சியில் நடைபெற்ற ஒரு நாள் பயிலரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார்.

21.03.2021 அன்று கோவை அண்ணாமலை அரங்கில் நடைபெற்ற பாரூக் நான்காம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பொள்ளாச்சி சார்பில் கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு வளர்ச்சி நிதியாக ரூ.10,000/- வழங்கினார்.

### தபசு செய்யுங்கள்



படுக்கையில் இருந்து எழும் போது, இன்று உங்கள் சுயமரியாதைக்கு என்ன செய்வது என்று யோசியுங்கள்! ஒன்றும் செய்யாத நாளை வீணாய்ப் போனதாக, உங்கள் வாழ்நாளில் ஒன்று குறைந்ததாகவும் நினையுங்கள். ஒவ்வொரு வாலிபரும் தங்கள் கடமையை உணருங்கள், உங்கள் சுயமரியாதைக்கு உங்கள் உயிரைக் கொடுக்கும் பாக்கியத்தை அடைய தபசு இருங்கள்.

இன்றைய தினம் வாலிபர்களாயிருக்கிற உங்களில் இருந்துதான் புத்த பகவானும், மகாத்மா காந்தியும், நாயர் பெருமானும், தியாகராயரும் தோன்ற வேண்டும். இவர்கள் எல்லாம் உங்களைப் போல் வாலிபர்களாக இருந்தவர்கள் தான்.

எந்தத் தேசமும் எந்தச் சமூகமும் பெரும்பாலும் அவ்வத்தேசத்தில் வாலிபர்களைக் கொண்டுதான் முன்வந்திருக்கிறதே அல்லாமல், பெரியோர்களையும் முதியோர்களையும் கொண்டல்ல. உலக வாழ்க்கையில் ஈடுபட்ட பெரியோர்களிடம் பொது நலமும், தியாக புத்தியும் காண்பது மிகவும் அரிது ; சுயநலந்தான் வளர்ந்துகொண்டு போகும். அவர்கள் பொதுநலத்திற்கு உழைப்பதாய்க் காணப்படுவது அவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்துத்தான் என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

**குடி அரசு : 12.09.1926**

## ‘பெரியாரும்–மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (6)

# பொதுவுடைமை கட்சியில் ‘ஏ.எஸ்.கே.’ கொண்டு வர விரும்பிய மாற்றம்

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

*எம்.சி.பி.அய்.(யு) என்ற மார்க்சிய கட்சி – தமிழ்நாட்டில் மார்க்சியர்கள் – பெரியாரியலை உள்வாங்கிக் கொள்ளவில்லை என்ற விமர்சன அறிக்கையை வைத்திருந்தது. அதைத் தொடர்ந்து இக்கட்சி வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையில், “சாதி–மதப் பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும் இக்காலக்கட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது” என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இந்தக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

ஏ.எஸ்.கே அய்யங்கார் என்று ஒருவர் இருந்தார். நான் ஐயங்கார் என்று சொல்கிறேன், பின்னால் அவர் 1969இல் ‘அய்யங்கார்’ என்பதை எடுத்துவிட்டு ஏ.எஸ்.கே என்று கெசட்டில் பதிவிட்டு பெயர் மாற்றம் செய்து கொண்டார். பெரியாரோடு மிக இணக்கமாக இருந்தவர். ரொம்ப நெருக்கமாக இருந்தவர். அவர் எழுதிய ஒரு நாவல் ‘தங்கம்மா’, அது அவருடைய அம்மா பெயர். அந்த நாவலைக் கூட பெரியாருக்குத் தான் காணிக்கை என்றார். இந்த நாட்டில் சிவப்பு விதைகள் முளைப்பதற்கு நிலத்தை பக்குவப்படுத்திய பெரியாருக்கு சமர்ப்பணமாக அதை வைத்தார். அவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார். ‘கடவுள் கற்பனையே’ என்றும், இன்னொன்று ‘பகுத்தறிவின் சிகரம் பெரியார் ஈ.வெ.ரா’ என்றும் எழுதியிருக்கிறார்.

பெரியார்கூட அவரிடம் வேடிக்கையாகச் சொல்லுவாராம். ஏன் கெசட் நோட்டிஃபிகேஷனில் ஐயங்கார் என்பதை எடுத்தீர்கள் என்றாராம். தமிழ் நாட்டில் ஜாதிப் பெயரோடு இருக்க எனக்கு கூச்சமாக இருக்கிறது என்றாராம் அவர். பெரியார், நீங்கள் ஜாதிப் பேரை வைத்துக் கொண்டிருந்தால் தான் நன்றாக இருக்கும், என்றாராம். நீங்கள் அய்யங்கார் என்ற பெயரோடு பார்ப்பனரை எதிர்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நீங்கள் போய் அய்யங்கார் என்பதை எடுத்துவிட்டீர்களே என்று பெரியார் வருத்தப் பட்டதாக வேடிக்கையாக சொல்லுவார்கள். அதை எதற்காக எழுதினார் என்றால், கம்யூனிஸ்ட்டுகள் நாத்திக பரப்புரையை செய்தாக வேண்டும் என்பதற்கு, அவரின் நூலின் முன்னுரையில் ஒரு மேற்கோளைத் தருகிறார். லெனினுடைய நூலைத் தான் அவர் சொல்கிறார். On the significance of Militant Materialism என்று; புரட்சிகர பொருள் முதல்வாதத்தின், அல்லது, நாத்திகத்தின் தேவை. அதனுடைய தமிழ் மொழி பெயர்ப்பை நான் சொல்லுகிறேன். அது ஆங்கிலத்தில் இருந்தது.

“இன்றைய சமூக அமைப்பு பல இலட்சக் கணக்கான உழைப்பாளி, விவசாய மக்களை, அறியாமை இருள், மூட பழக்க வழக்கங்கள் அழித்து வைத்திருக்கிறது. இந்த பிடிப்புகளிலிருந்து இவர்களை விடுதலை அடையச் செய்ய ஒரே வழி, தூய்மையான மார்க்சிய கல்வி யறிவைப் புகட்டுவது தான் என்று ஒரு மார்க்சியவாதி நினைத்தால், இதைத் தவிர மிகப் பெரிய இமாலயத் தவறு வேறு எதுவும் இருக்க முடியாது. மூட பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடக்கிற இந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு, நாம் நாத்திகப் பிரச்சாரத்தில் எளிமையான, அவர்கள் புரிந்துக் கொள்ளக் கூடிய பல வழிகளையும் கடைபிடிக்க வேண்டும். அவர்களின் சொந்த வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து பல நிகழ்ச்சிகளின் உதாரணங்களை எடுத்துக் காட்டி, மதத்தின் மாயைகளிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும். பல கோணங்களிலிருந்து பிரச்சாரம் செய்து, அவர்களின் உள்ளத்தில் ஆர்வத்தையும் எழுப்பிவிட வேண்டும். ஒரு கம்யூனிஸ்டாக இருப்பவன், அவன் மார்க்சிய வாதியாக இருக்கும் பட்சத்தில், மூடப் பழக்கங்கள், மத நம்பிக்கையில் மூழ்கி கிடக்கும் வளர்ச்சி யடையாத மக்கள் மனதில் அறிவுபூர்வமான ஆர்வத்தை மத விஷயங்களில் தூண்டி, விஞ்ஞான பூர்வமாக விமரிசனம் செய்து, மதத்தின் பிடி யிலிருந்து அவர்களை விடுவிக்கப் பாடுபட வேண்டும். இல்லையெனில் மார்க்சிய வாதி என்ற பெயரில் மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்து பவனாகத்தான்



ஒரு கம்யூனிஸ்ட் இருக்க முடியும்”, என்று அவர் சொல்லு கிறார்.

அவர் எழுதியதில், On the significance of the Militant Materialism என்கிற நூலில் அதைக் குறிப்பிடுகிறார். ஏ.எஸ்.கே. இது 1968இல் எழுதிய புத்தகம், பெரியார் இருக்கும்போது எழுதிய புத்தகம் தான். அப்பொழுது அந்த தேவை இருக்கிறது, நாம் அதைச் செய்ய தவறி விட்டோம் என்பதை அவர் அழுத்தமாக இறுதி வரை சொல்லிக் கொண்டு இருந்தார். அவர் ஒரு பெரிய தொழிற்சங்க தலைவராகவும் இருந்தார். அவர் குடும்பத்தில் எல்லோரும் திருமணமானவர்கள். இவர் மட்டும் திருமணம் செய்துக் கொள்ளவில்லை. (அவரின் அண்ணன் தம்பிகள் எல்லோருமே, ஜாதி மறுத்து ஒருவர் மட்டும், மற்ற இருவரும் வேறு மதத்திலும் திருமணம் செய்துக் கொண்டவர்கள்) அப்படிப் பட்ட ஒரு மார்க்சிய குடும்பம் தான் அது. ஆனால், அவர் பிறந்ததிலிருந்து நீண்ட நாளாக ஆந்திராவில் இருந்துவிட்டு இங்கு வருகிறார். திருக்குறளில் ஆழ்ந்த புலமையுள்ளவர் அவர். அவருக்கும் இங்கிருந்த மார்க்சியவாதிகளுக்கும் முரண்பாடுகள் இருந்துக் கொண்டே தான் இருந்தது. இங்கிருந்த கம்யூனிஸ்ட்களுடன், மார்க்சியவாதி களுடன் இல்லை, கட்சியினருக்கும் அவருக்கும் பிரச்னைகள் இருந்துக் கொண்டே இருந்தது. அந்த விமரிசனம் வைத்தார். ஏனென்றால், இந்த வேளை யில் பெரியாரைப் பற்றி சொல்லுகிற போது, அதை நாம் சொல்ல வேண்டி வரும் என்று கருதுகிறேன்.

பெரியாரைப் பற்றி இன்னொரு செய்தியை நான் சொல்ல வேண்டும். ரஷியாவிற்கு போனது ஒன்று. பின்னரும் உளவுத் துறையினர் அவரை துரத்திக் கொண்டே இருந்தார்கள். பின்னர் என்னைக் கூட ஒரு முறை ஈழத்திற்கு சென்று வந்த போது கேட்டார்கள். நீ ஒரு பெரியாரியவாதி, நேர்மையாக இருக்கவேண்டும், நீ எப்படி ஒளிந்துக் கொண்டு போனாய். திருட்டுத்தனமாக படகு ஏறி போவது என்ன நியாயம் என்று கேட்டார்கள். பெரியார் கூட அப்படித் தானப்பா போனார் என்று நான் பதில் சொன்னேன். துருக்கியில் பெரியார்குழு கப்பலில் ஏறி அடிமட்டத்தில் இருந்த நிலக்கரி கிடங்கில் மூன்று பேரும் உட்கார்ந்துக் கொள்கிறார்கள், ஏனென்றால் அவர்களை தேடுவார்களே என்று. பெரியாரின் உற்ற துணையாக இருந்த எஸ்.இராமநாதன் அவருடன் சென்றிருந்தார். அவர் ஒரு மார்க்சிய அறிஞரும் கூட. Revolt-ல் அவர் ஹெகலைப் பற்றி கட்டுரையெல்லாம் எழுதியிருக்கிறார் 1928இல். அப்படி ஒரு ஆழமான புரிதல் உடையவர் இவருடன் சென்றார். இன்னொருவர், இராமு என்பவர். இவர்கள் மூன்று பேரும் போய் நிலக்கரி கப்பலில் அடிமட்டத்தில் போய் உட்கார்ந்து கொண்டு பயணித்தார்கள், ரஷிய எல்லை வந்தவுடன்தான் மேலே வருகிறார்கள். அது நடந்திருக்கிறது.

அதற்கு பின்னால், 1935ஆம் ஆண்டு பெரியார், சீனா போவதற்கு அப்ளை செய்கிறர். அண்மையில் தான் அந்த ஆவணங்கள் கிடைத்தது. சில ஆண்டு களுக்கு முன்னால்தான் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் வழியாக வெளிவந்தது. இந்திய உள்துறை அமைச்சகம் மறுக்கிறது. என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், 10/08/1935-ல் மறுத்து வருகிறது கடிதம், இவர் ஐந்தாம் மாதம் அப்ளிகேஷன் போடுகிறார். எட்டாம் மாதம் வருகிறது. சென்னை மாகாண சட்டத்துறை துணைச் செயலாளர் DH Boulden-க்கு இந்திய உளவுத்துறை கடிதம் எழுதுகிறது அவரைப் போன்ற கருத்துகளை கொண்டவர்களை, அந்த நாடுகளை பார்வையிட அனுமதிப்பது விரும்பத்தக்கது அல்ல என்று அரசு கருதுகிறது. ஏனெனில், அவர் ஏற்கனவே ஜப்பானில் வாழ்ந்து வருகிற ராஷ்பிஹாரி போஸ் மற்றும் புரட்சிகாரர்களுடன் சேர்ந்துக் கொள்வார் என்று அரசு அஞ்சுகிறது.

திரு. இராமசாமி நாயக்கர் இந்த மாகாணத்தின் சுயமரியாதை லீக்-கின் தலைவராவார். அந்த லீக்-கின் உறுப்பினர்கள் சிலர் இன்னமும் சோசியல்-கம்யூனிசம் (என்ற ஒரு வார்த்தையை அவர் பயன்படுத்துகிறார்) பேசுகிறார்கள், பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர் என்று எழுதுகிறார்கள். அதற்கு இங்கிருக்கிறவன், அது நம் நாட்டுக்கு வருகிறது, இங்கு தமிழ்நாட்டில் இருக்கிறவன் ஒரு கடிதம் அனுப்புகிறான். என்னவென்றால், தகவலுக்காக இதை அனுப்பு கிறோம். Director, Intelligence Bureau அவர்கள் பார்க்கவும். இதில் சென்னை மாகாண அரசு மேற்கொண்ட நடவடிக்கையானது, எதன் பொருட்டும் - நீங்கள் எந்த நடவடிக்கையாவது எடுங்கள் - எதன் பொருட்டும் திரு இராமசாமி நாயக்கர் பார்க்க விரும்பும் நாட்டுக்கு போகிறேன் என்று முடிவு செய்துவிட்டால், அதை தடுக்கப் பயன்படாது என்கிறார். நீ என்ன வேண்டு மென்றாலும் சொல்லிவிடு, அவர் போகலாம் என்று முடிவுசெய்துவிட்டால், அதை தடுக்க முடியாது, என்று அவர் அதில் குறிப்பு எழுதுகிறார், என்று ஆவணங்களில் குறிப்பிட்டு இருக்கிறது. எனவே அவருக்கு இது மட்டுமல்ல. அடுத்து சீன நாட்டில் எப்படி புரட்சி வந்தது என்று பார்க்க வேண்டும் என்ற ஆர்வமும் அவருக்கு இருந்திருக்கிறது. அது நல்லவண்ணம் சென்றிருக்குமேயானால், ஒரு வேளை தமிழ் நாட்டுக்கு மட்டுமாவது ஏதேனும் மாற்றம் வந்திருக்குமோ என்று நாம் நினைக்கிறோம்.

(தொடரும்)

## அ.தி.மு.க. இணைப்பில் சீமான் காட்டிய அதீத ஆர்வம்!

பிரதமர் மோடி தனக்கு தூது அனுப்பி ஆதரவு கேட்டதாக நாம் தமிழர் இயக்க ஒருங்கிணைப்பாளர் சீமான் தந்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

“பிரதமர் மோடியின் சார்பில் ஒரு சீக்கியர் என்னிடம் தொடர்பு கொண்டு பேசினார். மோடிக்கு உங்களை மிகவும் பிடிக்கும்; பா.ஜ.க. அணியில் நீங்கள் இணைந்து செயல்பட வேண்டும் என்று விரும்புகிறார்; அது மட்டுமின்றி ‘நான் ஒரு பிராமின் அ ல்ல’ என்பதையும் சீமானிடம் கூறுங்கள்” என்று மோடி கூறியதாக என்னிடம் கூறினார். ஆர்.எஸ்.எஸ். தூதர் ஒருவரும் பேசினார், எனது ஆதரவைக் கேட்டார். என்னை மாநிலங்களவை உறுப்பினராக்குவதாக உறுதியளித்தார்கள்” என்று சீமான் கூறியிருக்கிறார். இது குறித்து ஜெகத்கஸ்பரிடம் ஒரு ‘யூ டியூப்’ அலைவரிசையில் கேட்டபோது அவர் அளித்த பதில்:

ஆர்.எஸ்.எஸ்.சும் மோடியும் சீமானிடம் ஆதரவு கேட்க வந்திருப்பதே அவரது கொள்கை பலவீனத்தைக் காட்டுகிறது. இதேபோல் தி.க. தலைவர் கி. வீரமணி அவர்களிடமோ, கொளத்தூர் மணியிடமோ, கோவை இராமகிருட்டிணமிடமோ வந்து கேட்க முடியுமா?” என்று பதிலடித் தந்துள்ளார்.

அதே தந்தி தொலைக்காட்சி பேட்டியில் சீமான் மற்றொரு கருத்தையும் கூறினார். “திராவிட கட்சிகளை எதிர்க்கப் புறப்பட்டிருக்கும் நீங்கள், சிறையிலிருந்து விடுதலயான சசிகலாவை நேரில் சென்று சந்தித்தது ஏன்”? என்பது கேள்வி. அதற்கு சீமான், “சிறையில் துன்பப்பட்டு வந்திருக்கிறார். மனிதாபிமானத்துடன் சென்று பார்த்தேன். அத்துடன் எனது மாமனாரின் (முன்னாள் அமைச்சர் காளிமுத்து) உறவினர்” என பதில் கூறினார். அ.தி.மு.க. வுடன் சசிகலாவையும் அ.ம.மு.க.வையும் இணைப்பது குறித்து ஏதேனும் சசிகலா பேசினாரா என்ற கேள்விக்கு, “அவர் எதையும் பேசவில்லை; நான் தான் கேட்டேன்; இணைப்பு முயற்சிகளை நான் ஏதேனும் செய்யலாமா என்று; அவர் அமைதியாக இருந்து விட்டார்” என்றார் சீமான்.

திராவிடக் கட்சிகள் நாட்டை சீரழித்து விட்டன என்று மேடைகளில் ‘முழங்கும்’ சீமான், அ.தி.மு.க. ஒன்று பட வேண்டும் என்பதில் இவ்வளவு முனைப்பு ஏன் காட்ட வேண்டும் என்ற கேள்வியை பலரும் கேட்கிறார்கள்.

“தி.மு.க.வை வீழ்த்திட வேண்டும் என்ற ஒரே கொள்கை தான் சீமானிடம் இருக்கிறது. அதைப் புரிந்து கொண்டுதான் பா.ஜ.க. அவருக்கு தூது விடுகிறது; அவரே சசிகலா - அ.தி.மு.க. இணைய வேண்டும் என்று விரும்புகிறார்” என்று சமூக வலைதளங்களில் எழுதி வருகிறார்கள்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பொள்ளாச்சியில் கழகத்தின் ஒரு நாள் பயிலரங்கம்




திராவிடர் விடுதலை கழகத்தின், பெரியாரியல் பயிலரங்கம் பொள்ளாச்சியில் உள்ள பர்வாணா அரங்கத்தில் 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணியளவில் பயிலரங்கம் நடைபெற்றது. பயிலரங்கத்திற்கு அரிதாஸ் தலைமை வகித்தார். பெரியார் பிஞ்சு கயல்விழி கடவுள் மறுப்பு கூற பயிலரங்கம் தொடங்கியது.

முதலாவதாக, பெரியாரியல் பயிலரங்கத்தின் நோக்கத்தை விளக்கி கோவை மாவட்ட செயலாளர் வே வெள்ளிங்கிரி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து ‘பெரியாரும் பெண் உரிமையும்’ என்ற தலைப்பில் வினோதினி உரையாற்றினார். தேநீர் இடைவேளைக்குப் பிறகு ‘பெரியாரும் விஞ்ஞானமும்’ என்ற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் தலைவர் ஆசிரியர் சிவகாமி உரையாற்றினார். ‘பெரியாரும் பகுத்தறிவும்’ என்ற தலைப்பில் தமிழ்நாடு மாணவர் கழகம் திருப்பூர் சந்தோஷ் உரையாற்றினார். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு ‘மந்திரமல்ல எல்லாம் தந்திரமே’ நிகழ்வை தலைமைக்குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் நிகழ்வை நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சனாதானத்தை முறியடித்தவர்கள் ‘புத்தர் வள்ளலார் பெரியார்’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். இறுதியில் தோழர் சிவானந்தம் 50 ஆவது பிறந்த நாளை பயிற்சி வகுப்பில் கழகத் தலைவருடன் கொண்டாட வேண்டுமென்று அவர்களுடைய மகன் வவுனியன் இலக்கியன் மற்றும் இணையர் விருப்பத்தின் பேரில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. பயிலரங்கத்தில் 90 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

பயிலரங்கத்தில், கோவை மாவட்டம் சங்கனூர் பகுதியைச் சேர்ந்த கார்த்தி, உஷா, எழிலரசன், கயல் ஆகியோர் குடும்பத்துடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தனர். மற்றும் கோவை மாவட்டம் சவுரிபாளையம் அருகே காந்தி நகர் பகுதியை சேர்ந்த ரவி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில், திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தார்.

## அ.தி.மு.க. ஆதரவு ஏடு ‘தினமலர்’ கூறுகிறது : தோல்வி முகத்தில் 22 அமைச்சர்கள்

22 அமைச்சர்கள் தங்கள் தொகுதிகளில் கடும் போட்டிகளில் சிக்கி திணறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெற்றி வாய்ப்புக் குறைவு என்று அ.தி.மு.க. - பா.ஜ.க. ஆதரவு ஏடான ‘தினமலர்’, அவர்கள் போட்டியிடும் தொகுதிகளை விரிவாக அலசி எழுதியிருக்கிறது. மார்ச் 18, ‘தினமலர்’ ஏட்டில் இந்த செய்தி வெளி வந்துள்ளது. அடுத்தத் தொகுதியில்கூட சென்று பிரச்சாரம் செய்ய முடியாத நிலையில் அவர்கள் ‘லாக்’ செய்யப்பட்டுள்ளார்கள். தி.மு.க. கிடுக்குப்பிடி போட்டு விட்டது என்று எழுதியுள்ளது ‘தினமலர்’.

அந்த அமைச்சர்கள் பட்டியல் : வேலுமணி, உடுமலை இராதாகிருஷ்ணன், செல்லூர் ராஜு, திண்டுக்கல் சீனிவாசன், இராஜேந்திர பாலாஜி, கடம்பூர் ராஜு, ராஜலட்சுமி, ஜெயக்குமார், பாண்டியராஜன், பெஞ்சமின், செங்கோட்டையன், கருப்பணன், வீரமணி, தங்கமணி, அன்பழகன், எம்.ஆர். விஜயபாஸ்கர், ராமச்சந்திரன், சம்பத், ஓ.எஸ்.மணியன், காமராஜ், வெல்லமண்டி நடராஜன், சி. விஜயபாஸ்கர்.

உதயகுமார், சி.வி. சண்முகம் என்ற இரண்டு அமைச்சர்கள்தான் அடுத்த தொகுதிக்கு பிரச்சாரத்துக்கு போகிறார்கள் என்றும் ‘தினமலர்’ ஏடு எழுதியுள்ளது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

“சுயமரியாதை ஒரு கருத்தாக்கம் அல்ல; அது தொடர் பயணத்துக்கான வழிகாட்டி. சுயமரியாதை சுற்று வட்டப் பாதைக்குப் போய் விட்டதால், அது சுழன்று கொண்டே இருக்கும். அதுதான் எதிர்கால அனைத்து திட்டங்களுக்குமான வழிகாட்டி” என்று பேராசிரியர் ஜெயரஞ்சன் நூலுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகிறார். இதை பெரியார் வேறு மொழியில் கூறினார்.

**“சுயமரியாதை என்கிற ஒரு இஞ்சினை பயன்படுத்தி சரியாக ஓடத் தகுந்த சக்தியை உண்டாக்கி வைத்து விட்டால் பிறகு எந்த எந்திரத்தைக் கொண்டு வந்து அதோடு இணைத்துத் தோல் பட்டையை மாட்டி விட்டாலும் அது தானாகவே ஓடும்.” (குடிஅரசு, 17.2.1930)**

விளிம்பு நிலை மக்களுக்கான அரசின் முதலீடுகள்தான் சமூக மாற்றத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்குமான உந்து விசைகளாக மாறி நிற்கின்றன. திராவிடர் இயக்கத்தின் ஒரு நூற்றாண்டு சாதனைகளை சமூக-அரசியல் ஆய்வுகளுடன் பார்த்தால் இந்த முடிவுக்கு வர முடியும். ‘வெற்று முழக்கம்’, ‘வீண் ஆரவாரம்’ உள்ளீடற்ற உளறல்களால் திராவிடர் இயக்கத்தின்மீது சேற்றை வாரி வீசுவோருக்கு ஆய்வுபூர்வ மறுப்பை வழங்குகிறது இந்த நூல். இதன் உள்ளடக்கத்தை உள்வாங்கி மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். நூல் வெளி வந்த 15 நாட்களுக்குள் இந்த நூலின் முக்கியத்துவம் கருதி இதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்த ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தைப் பாராட்ட வேண்டும். பெரியாரியலை காலத்தின் அறைகூவலுக்கு ஏற்ப சமூக அரசியல் பார்வையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற துடிப்பு மிக்க இளைஞர்களின் பாசறையாக நமது இயக்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கான சான்று இது. தமிழகத்திலே இந்நூலின் மீது நடக்கும் முதல் ஆய்வுக் கூட்டமும் இது தான்” என்றார் விடுதலை இராசேந்திரன்.

# மருத்துவர் எழிலனுக்கு கழகத் தோழர்கள் வாக்கு சேகரிப்பு



திமுகவின் ஆயிரம் விளக்கு தொகுதியின் வேட்பாளர் எழிலனை ஆதரித்து 20.03.2021 சனிக்கிழமை மாலை 5 மணியளவில், ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட மக்கீஸ் கார்டன், போலீஸ் குடியிருப்பு, பட்டுக்கோட்டை அழகிரி நகர், குட்டி பேகம் தெரு ஆகிய பகுதிகளில் பிரச்சாரம் நடைபெற்றது.

தென் சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்ட துணை அமைப்பாளர் சுகுமார், மயிலை இராவணன், வழக்கறிஞர் துரை அருண் ஆகியோர் உட்பட சென்னை கழகத் தோழர்கள் பாஜக-வை எதிர்த்தும், திமுகவிற்கு வாக்களிக்கக் கூறியும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்

21.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட 18 ஆவது வட்டத்தில் முத்து தெரு, முத்து சந்து, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, அம்மையப்பன் தெரு, தோமையப்பன் தெரு, தாண்டவராயன் தெரு, ரிபோரியா தெரு, கோவர்தன் தெரு, பொன்னுசாமி தெரு ஆகிய பகுதிகளில் வீடு வீடாக திராவிடர் விடுதலைக் கழகம் வெளியிட்ட துண்டறிக்கைகளை பல்லாயிரக்கணக்கில் வழங்கினர்.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தென் சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்ட துணை அமைப்பாளர் சுகுமார், மயிலை இராவணன், வழக்கறிஞர் துரை அருண் ஆகியோர் உட்பட 30 தோழர்கள் பாஜக வை எதிர்த்தும், திமுகவிற்கு வாக்களிக்கக் கோரியும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

## 1 இலட்சம் சிறு-குறு தொழிற்சாலைகளை மூட வைத்தவர்கள் ஓட்டு கேட்டு வருகிறார்கள்!

நாட்டில் ஏராளமான வேலை வாய்ப்புகளைத் தரக் கூடிய சிறு-குறு-நடுத்தரத் தொழிற்சாலைகள், பா.ஜ.க.-அ.இ.அ.தி.மு.க. அலட்சியத்தால் மூடப்பட்டுவிட்டன.

- இந்தத் தொழிற்சாலைகளே நாட்டில் 90 சதவீத உற்பத்தியை செய்கின்றன.
- இந்தத் தொழிற்சாலைகளுக்கு உதிரி பாகங்களைத் தயாரிக்கும் ‘ஜாப் ஆர்டர்’களை எடுத்து வேலை செய்த பல இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்து முடங்கிக் கிடக்கிறார்கள்.
- 2016இல் மோடியின் பண மதிப்பிழப்பு நடவடிக்கை; 2017இல் வந்த ஜி.எஸ்.டி. - இரண்டுமே சிறு, குறு தொழில்களை சீரழித்துவிட்டன.
- கொரானா பாதிப்பிலிருந்து மீட்க உலகம் முழுதும் சிறு, குறு தொழில்களை மீட்கும் உதவிகளை நாடுகள் செய்தன. 2021-2022 நிதி அறிக்கை, இதை கண்டு கொள்ளவே இல்லை.
- குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும்; ஏற்கனவே வாங்கிய கடனுக்கு வட்டி தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்தத் தொழிலில் ஈடுபட்டோர் வைத்த கோரிக்கையை மோடி ஆட்சி காதில் போட்டுக் கொள்ளவில்லை.
- தொழில் முனைவோருக்கு 3 இலட்சம் கோடி கடன் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மட்டும் வந்தது. ஆனால் யாருக்கும் கடன் வழங்கப்பட்டதாகவே தெரியவில்லை.
- ஏற்கனவே கடன் வாங்கியோருக்கு வாங்கிய கடனில் 20 சதவீதம் புதிய கடன் வாங்கலாம் என்று அறிவித்தார்கள். ஆனால் ஏற்கனவே கடன் வாங்கி கடன் தொகையை முழுமையாக செலுத்தியோருக்கு கடன் இல்லை என்று கை விரித்து விட்டார்கள்.

  இது மத்திய அரசு இழைத்த அநீதி என்றால், மாநில அரசும் அதைத் தான் செய்தது.
- கொரானா காலத்தில் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் மின்சாரக் கட்டணத்தை இரத்து செய்ய கோரிக்கை வைத்தனர். அ.தி.மு.க. ஆட்சி ஏற்கவில்லை. ஆனால் தனியாரிடம் மின்சாரம் வாங்குவதற்காகவே அரசு மின் உற்பத்தியை திட்டமிட்டு குறைத்தார்கள் என்றும், 2028ஆம் ஆண்டு வரை தனியாரிடம் மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போட்டுள்ளதையும், இதனால் ஏற்கனவே 30,000 கோடி ரூபாய் வரை அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதையும் தணிக்கை ஆணையம் அம்பலப்படுத்தியிருந்தது. அந்த அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யாது மூடி மறைத்து விட்டது அ.தி.மு.க. ஆட்சி.
- கொரானா பாதிப்பிலிருந்து மீண்டு வர தாட்கோ மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்க ஏற்பாடு செய்யுங்கள் என்ற கோரிக்கையையும் அ.தி.மு.க. ஆட்சி ஏற்கவில்லை.
- கார்ப்பரேட் நிறுவனங்கள் மூலப் பொருள்கள் விலையை 30 சதவீதத்திலிருந்து 150 சதவீதமாக உயர்த்தி விட்டன. இதைக் கட்டுப்படுத்துங்கள் என்ற கோரிக்கையையும் மாநில அரசு கேட்கவில்லை.
- 12 இலட்சம் சிறு-குறு தொழிற்சாலைகளில் கொரானா பாதிப்பால் ஒரு இலட்சம் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டதால் பல இலட்சக்கணக்கானோர் வேலை இழந்துவிட்டனர்.

(தகவல்களுக்கு ஆதாரம்: தொழில் முனைவோர் சங்கத் தலைவர் ஜே. ஜேம்ஸ் அறிக்கை)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP   Posted: 25th March 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN